<u>**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**</u>

<u>**OS.No. 119/2020**</u>

| | | | |
|---|---|---|---|
| | | **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
| NAME | அஸ்லாம் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | சாயத் பஷீர் | RELIGION | முஸ்லிம் |
| AGE | 52 | OCCUPATION | |
| VILLAGE | தரணம்பேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 21.08.2025.

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**</u>

1. நான் இந்த வழக்கை எஸ்.எம்.தேவராஜ் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலத்திற்குள் வரக்கூடாது என்று வழக்கு போட்டுள்ளேன். அவருக்கு என்ன வயதிருக்கும் என்றால் 70, 75 இருக்கும். அவர் எப்படி எனக்கு தெரியும் என்றால் நிலம் வாங்கி கொடுத்தார், சாட்சி கையெழுத்து போட்டார், எனது பக்கத்து நிலத்துக்காரர்.

2. அவர் குடியாத்தம் வாரியார் நகரில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அவர் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்து உள்ள இடத்திற்கும் சுமார் 15, 16 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் தேவராஜிக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ளது என்றால் ஒரு நிலம் தள்ளி உள்ளது.

3. தாவா சொத்தின் சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் சர்வே எண்.312/1, 4 ஏக்கரா 75 செண்ட், சர்வே எண்.314/1, 5 செண்ட். தாவா சொத்து விவரத்தில் விஸ்தீரணத்தில் என்ன உள்ளது என சொல்லியுள்ளேனா என்றால் மாஞ்செடி உள்ளதாக சொல்லியுள்ளேன். அதில் மாஞ்செடிகள் 10 உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. தாவா சொத்தின் 10 மாஞ்செடி உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையில் 350 மாமரங்கள் உள்ளது என்றால் பத்திரத்தில் 10 மாஞ்செடி உள்ளதாகத்தான் சொல்லியுள்ளது, 350 மாமரங்கள் இல்லை சுமார் 220 மாமரங்கள் உள்ளது. அந்த மாமரங்களுக்கு எப்படி நீர் பாசனம் செய்கிறோம் என்றால் போரில் தண்ணீர் எடுத்து பாசனம் செய்கிறோம்.

5. அந்த போரை யார் போட்டது என்றால் நான் நிலம் வாங்கும்போதே போர் போட்டிருந்தது. நான் 07.03.2018 நிலம் வாங்கினேன். நான் நிலம் வாங்குவதற்கு முன்பு எனக்கு நிலம் விற்றவர்களுடன் பிரதிவாதி ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டிருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையத்தை சம்சம் பேகத்திடம் இருந்து வாங்கினேன் என்றால் சரியல்ல, ரவி நாயுடு என்பவரிடம் இருந்து வாங்கினேன்.

6. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் எனக்கு யார் நிலத்தை விற்றுள்ளது என்றால் ரவி நாயுடு விற்றார், அவர் யாருக்காக பவராக இருந்தார் என்றால் நிறைய பேருக்கு பவராக இருந்தார். அதில் சம்ஜாத் பேகமும் ஒருவர் என்றால் சரிதான். மேற்படி சம்ஜாத் பேகம் என்பவர் தாவா சொத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்ய 03.05.2016–ல் கிரைய ஒப்பந்தம் செய்து 20,00,000/– விலை பேசி 10,00,000/– முன் பணமாக பெற்றுக்கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7. கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட 03.05.2016 அன்றே பிரதிவாதிக்கு தாவா சொத்தானது அனுபவத்தில் விடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 02.12.2016 அன்று கிரைய பாக்கிதொகையில் 7,00,000/– ஐ சம்ஜத் பேகம் வாங்கிகொண்டு கிரைய ஒப்பந்தத்தில் பின்னால் எழுதி கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 03.05.2016 ஒப்பந்தப்படி கிரைய தொகையில் 17,00,000/–ஐ கொடுத்துவிட்டு அன்று முதல் இன்றுவரை பிரதிவாதி தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்ததால் அவர் தான் போர் போட்டு சொட்டுநீர் பாசன முறையில் மா மரங்களுக்கு நீர் பாய்ச்சி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, நான் வாங்கும்போது ஏற்கனவே போர் போட்டிருந்தது. தாவா சொத்திற்கு குடியாத்தம் பலமனேரி சாலையிலிருந்து சைனகுண்டா வழியே ஆற்றை கடந்து தான் செல்லமுடியும். சொத்திற்கு செல்ல தனி வழி இல்லை என்றால் உள்ளது, ஆறு வரை வழி உள்ளது, அதன்பிறகு ஆற்றை கடந்து தான் செல்ல வேண்டும்.

9. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ஆற்றை கடந்து இரண்டு நபர்களது நிலத்தை தாண்டி பிரதிவாதியின் நிலத்தை தாண்டி தான் தாவா சொத்திற்கு போக முடியும் என்றால் சரியல்ல, ஆற்றை ஒட்டியே தாவா சொத்து உள்ளது. பிரதிவாதி தாவா சொத்தில் போர்வெல் அமைக்கவும் சொட்டுநீர் பாசனம் அமைக்கவும் சித்தூரில் இருந்து பைப்களை வாங்கி வந்தார் என்றாலும் அதற்கான ரசீதுகள் அவரிடம் உள்ளது என்றாலும் அவை தெரிந்திருந்தும் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. தாவா சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் பிரதிவாதி எனது நண்பர் என்பதால் அவர் என்னிடம் 20,00,000/- கடன் கேட்டு அதை நான் கொடுத்தேன் என்றாலும் அதற்கு மாதம் 2 ரூபாய் வட்டி வாங்கி வந்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி கடனுக்கு நான் சொத்து பத்திரம் கேட்டதால் பிரதிவாதி ஏற்கனவே போட்டு வைத்திருந்த கிரைய ஒப்பந்தப்படிக்கு பினாமி என்ற முறையில் என் பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்தி வைத்தார் என்றால் சரியல்ல.

11. கிரைய ஆவணம் ஏற்பட்ட தேதியிலிருந்து நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் அது பொறுப்பு ஆவணம் என்றாலும் இதுநாள் வரை பிரதிவாதி தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல, நான் தான் சுவாதீனத்தில் உள்ளேன். இடைப்பட்ட காலத்தில் பிரதிவாதி எனக்கு 40,000/- ரூபாயை வட்டியாக கொடுத்தார் என்றாலும் அப்போது 28,80,000/- ரூபாயை கொடுத்துவிட்டால் மறு கிரையம் பிரதிவாதி பெயரில் செய்து கொடுப்பதாக நான் ஒப்புக்கொண்டு எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. நான் ஒப்புக்கொண்டு எழுதி கொடுத்ததன் அடிப்படையில் நான் செயல்படவில்லை என்பதால் பிரதிவாதி எனக்கு 04.08.2020 அன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தாரா என்றால் கொடுத்தார், அந்த அறிவிப்பு பொய் என நான் பதில் கொடுத்துள்ளேன். 19.08.2020-ல் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி கொடுத்த அறிவிப்பில் 2016ஆம் ஆண்டிலிருந்து தாவா சொத்தில் அவர் தான் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லியிருந்தார் என்றால் சரிதான்.

13. நான் பதில் அறிவிப்பு கொடுத்த பிறகு இந்த வழக்கை 21.09.2020 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாவில் பிரதிவாதி யார் என்றே தெரியாது என்றும் 3ஆம் நபர் என்றும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சொத்திற்கு 3ஆம் நபர் என சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பசலி ஆண்டு 1429-க்கான அடங்கலில் எஸ்.எம். தேவராஜ் சாகுபடி செய்து வருவதாக துணை வட்டாட்சியர் அடங்கல் கொடுத்துள்ளார் என்றால் சரிதான், என் பெயரிலும் அடங்கல் உள்ளது. மேற்படி அடங்கல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. நானும் பிரதிவாதியும் 02.02.2020 அன்று 28,80,000/-ஐ கொடுத்தால் பிரதிவாதிக்கு மறு கிரையம் எழுதி கொடுப்பதாக நான் எழுதிகொடுத்த கடிதம் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரியல்ல. அந்த கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது அல்ல. அந்த 02.02.2020 தேதியிட்ட கடிதத்தின் அசல் என்னிடம் உள்ளது என்றாலும்

அதை தாக்கல் செய்தால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதா என தெரியவரும் என்றாலும் என்னிடம் இல்லை. மேற்படி கடிதம் நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (ஆவணம் நகல் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).

15. பொய்யான தகவலுடன் தாவா தாக்கல் செய்ததால் எனது தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. இதுவரை பிரதிவாதி தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளதால் அவர் தாவா சொத்தில் நுழையக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியுள்ளது சரியல்ல என்றாலும் தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

16. எனக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணம் பொறுப்புக்காக எழுதப்பட்டது என்றாலும் அதன் பெயரில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. அந்த கிரைய ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல, நான் தான் 07.03.2018 தேதியில் இருந்து சுவாதீனத்தில் உள்ளேன். நான் முதல் விசாரணையிலும், தாவாவிலும் சொல்லியுள்ள சங்கதிகள் எல்லாமும் தவறானவை என்றாலும் அதனால் இந்த தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2025.08.21 18:27:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.